# மாணவர் நலனில் தி.மு.க.!

கல்விதான் சமுதாயத்தை மாற்றும் ஆயுதம். அடிமைப்பட்டு கிடக்கும் சமுதாயத்தை, சுய உணர்வு கொண்டவர்களாக மாற்றும் அந்தப் பேராயுதத்தை கைப்பற்றும் படி முழங்கியவர்களே உலகப் புரட்சியாளர்கள் ஆகினர். அன்றைய அடிமை வீரன் ஸ்பார்டகஸ் தொடங்கி, இன்று நம் மண்ணில் நம் மக்களுக்காக, சுயமரியாதை வீரராக, சமூகநீதி ஆட்சி நாயகராக உழைத்துக் கொண்டிருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிற திராவிட மாடல் நாயகர் வரை பல தனித்துவ தலைமை ஆளுமைகளும் கல்வியின் மகத்துவம் உணர்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் குழுவினர், படிக்கவும், பள்ளிக்கூடங்கள் செல்லவும் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆரியம் உருவாக்கி வைத்திருந்த கட்டுப்பாடுகளை உடைத்து நொறுக்கியது திராவிடச் சிந்தனை புரட்சிதான். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், பின்னர் திராவிடர் கழகம் என நம் முன்னோடிகள் அதில் பெரும் தாக்கத்தைச் செலுத்தி நம் கையில் கல்வியறிவு எனும் கிடைக்கச் செய்தனர். சுதந்திர இந்தியாவுக்கு பின்னர் நமது கல்வி முன்னேற்றத்தில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திய கட்சியாகவும், ஆட்சியாகவும் திராவிட முன்னேற்ற கழகம் திகழ்ந்து கொண்டிருப்பதை வரலாறு அறிந்த எவரும் மறுக்க முடியாது.

தமிழ்நாட்டின் கல்வி முன்னேற்றத்திலும், மாணவர் நலனிலும் மிகப் பெரிய அக்கறையுடன், புயல் காற்றில் படகினைப் போல ‘ பல போராட்டங்களுடன் முன்னகர்த்திக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான். அவர், சாமர்த்தியமான மாலுமி.

தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை ஏழை அடித்தட்டு மக்களுக்கும் பயன்பட வேண்டும் என, இந்தியாவுக்கே முன்னோடியாக உள்ள திட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியவர் கலைஞர். கல்விக்கு நிதி ஒதுக்கீடுகளை அதிகப்படுத்தி, மாணவர்களின் வாழ்க்கையை மாற்றி யமைத்துள்ளது கழகம்.

**தமிழ்**
**கா.அமுதரசன்**
கழக மாணவரணி
துணைச் செயலாளர்



தொடக்கக் கல்வி கட்டாயமாக்கம், இலவச நூல்கள், சீருடைகள் , மதிய உணவு திட்டத்தை ஊட்டச்சத்து உணவாக்கியது, சமச்சீர் கல்வி என பள்ளிக்கல்வியை பல படிகள் உயர்த்தியவர் நம் தலைவர் கலைஞர்தான்.

பொறியியல் தொழில்நுட்பக் கல்விக்காக அண்ணா பல்கலைக் கழகம் உள்பட பல கல்லூரிகள் நிறுவியது, இந்தியாவுக்கே முன்னோடியாக தகவல் தொழில்நுட்பக் கொள்கை உருவாக்கியது என நம் கலைஞரின் மகத்தான கட்டமைப்புகள் ஏராளம்.

கலைஞர் வழி வந்த நம் அரசு, மாணவர் நலனில் கொண்டிருந்த, கொண்டிருக்கின்ற அக்கறை புள்ளி விவரங்களால் மட்டும் சொல்லிவிடக்கூடியதல்ல. மாணவர்களின் எதிர்காலம் குறித்து இதயபூர்வமாக உணர்ந்த ஒரு தலைவரின் தொலைநோக்கு நம் சமகாலத்தில் பார்க்கலாம்.

**நான் முதல்வனை உருவாக்கிய முதல்வர்**

2021 ஆம் ஆண்டு, கழகம் ஆறாவது முறையாக ஆட்சிக்கு வந்தது. நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பொறுப்பேற்ற அந்த நாட்கள் உலகமே கொரோனா அச்சத்தால் சுருண்டிருந்தது. மாணவர்களின் கற்றலில் பெரும் தேக்கம் ஏற்பட்டிருந்தது. பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் பிள்ளைகளில் கல்வி பாதிக்கப்படுகிறதே என பெற்றோர் உணர்ந்த நேரத்தில் , ’இல்லம் தேடிக் கல்வி’ என பள்ளிக்குச் செல்ல முடியாத மாணவர்களுக்கு நேரடியாக வீட்டிலேயே கல்வி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்.

உயர்கல்வியில் முன்னிலையில் உள்ள தமிழ்நாட்டில், படித்து முடித்து வெளியில் வரும் மாணவர்கள் நமது அரசு ‘ பக்கோடா’ விற்று பிழைக்கலாம் எனச் சொல்லவில்லை. ஒருவேளை அடிமை எடப்பாடிகள் இருந்திருந்தால் இன்றைக்கும் நம் மாணவர்கள் அந்த நிலையை அடைந்திருக்கலாம். ஆனால், நம் முதலமைச்சர் ‘ நான் முதல்வன்’ என 2022 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கே முன்னோடி திட்டத்தை அறிமுகம் செய்தார்.

உயர் கல்வி - திறன் மேம்பாடு - தொழில்நுட்பம் மென்பொருள் - வேலைவாய்ப்பு என மாணவர்களின் வாழ்க்கைத் திட்டமிடலுடன் உருவாக்கப்பட்ட ’நான் முதல்வன்’ திட்டம், இன்று மூன்றாண்டு சாதனைகளை கடந்து செயல்பட்டு வருகிறது.

பல துறைகளோடு இணைக்கப்பட்டுள்ள நான் முதல்வன் திட்டத்தின் கீழ், இன்று 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் அயலக உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர். தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் வெற்றிபெறுவது கடினம் என்பதை உடைத்து இன்று பலரும்வெளி மாநிலங்களிலும் படிக்கச் சென்றுள்ளனர். இந்தச் சாதனைகள் எல்லாம் சத்தமில்லாமல் நடைபெற்று வருகின்றன.

**புதுமைப்பெண் திட்டம்**

புதுமைப் பெண் திட்டத்தின் நோக்கத்தினை நமது அரசு சொல்ல வேண்டுமென்பதில்லை. தேசிய அளவில் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை குறித்த புள்ளி விவரங்களே திராவிட மாடல் அரசின் பெருமையைச் சொல்லும். இதுவரை புதுமைப்பெண் திட்டத்தில் பயனடைந்துள்ளார் என்றால் அவர்கள் அனைவரும் உயர்கல்வி சென்றுள்ளனர் என்பது பொருளாகும் . ஏனென்றால் புதுமைப் பெண் திட்டத்தின் காரணமாக dropout விகிதம் குறைந்தது.

**தொழில்நுட்பக் கொள்கை**

பொறியியல் கல்வி முடித்த மாணவர்களின் வேலை வாய்ப்பினை உறுதி செய்யும் வகையில், அவர்களுக்கு துறை சார்ந்த திறனை மேம்படுத்தி பல்வேறு முன்னணி நிறுவனங்களில் வேலை பெற்றுள்ளனர். குறிப்பாக, கல்வி நிறுவனங்களிலேயே வேலை உறுதி செய்யப்படும் அளவுக்கு பயிற்றி பெற்று வருகின்றனர்.

இப்போது புதிய திட்டமாக , கல்வி நிறுவனங்களில் இருந்து இடைநின்ற மாணவர்களுக்காக ‘ வெற்றி நிச்சயம் என புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது நம் அரசு.

முதல்முதலில் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கி, ’டைடல் பார்க்’ என மாணவர்களுக்கு மிகப் பெரிய வாசலை திறந்தவர் நம் கலைஞர். அவரது வழியில் இன்று 10 நகரங்களில் மினி டைடல் பூங்காக்களை உருவாக்கியது நம் மாணவர்களின் நலனில் கொண்டிருக்கும் அக்கறைதானே. .அன்று கலைஞர் கொண்டுவந்த கொள்கையும், இன்று அவர் வழியிலான தளபதி அவர்களின் அரசு தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அடித்தளமாக திகழ்கின்றன.

“வேலை தேடுபவர்” என்கிற நிலையில் இருந்து “வேலை தேடி வருவது” என்ற நிலை ஏற்பட்டுள்ளனது. குறிப்பாக, கிராமப்புற பகுதிகளிலிருந்து வந்த மாணவர்களும் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பாகச் செயல்படுவதற்கு பாதை அமைத்துள்ளது நம் அரசு.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கல்வி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான திட்டங்கள் அனைத்தும் மாணவர்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையில்லை.

கல்வியை ஒரு சமூக சாதனமாகப் பயன்படுத்தி, சமத்துவம் சமூகநீதி மற்றும் வளர்ச்சியை நோக்கிய பயணம் தமிழகத்தில் தொடர்ந்து விரிந்து செல்கிறது. கலைஞர் அமைத்த அடித்தளத்தில், நம் திராவிட மாடல் நாயகர் மிகப்பெரும் கட்டமைப்பை நிகழ்த்துக் கொண்டிருக்கிறார். அது மாணவர் நலனில் கழகமும், கழக அரசும் கொண்டுள்ள அக்கறை என சொல்லத் தேவையில்லை.




தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மு.மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் முனைவர் செ.குறிஞ்சி வாணன் (திருவிடைமருதூர்), பி.எம்.ஆனந்த் (பாபநாசம்), மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஜெ.நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில சார்பு அணி நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

### தென்பெண்ணை ஆற்றில் கடுமையான மாசு!

# மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30 -

பல்வேறு மாநிலங்களிடையே பாயும் தென்பெண்ணை போன்ற ஆறுகள் மேல்பகுதியில் உள்ள மாநிலங்களில் இயங்கும் ஆலைகள் வெளியேற்றிடும் கழிவுநீரால் மிகக் கடுமையான அளவில் மாசுபடும் பிரச்சினை குறித்து அரசு அறிந்துவைத்துள்ளதா? அப்படியானால் இதற்கு காரண மான தொழிலக நிறுவனங்கள் மேல் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியமும் இன்ன பிற சுற்றுச் சூழல் தீர்ப்பாயங்களும் சென்ற இரண்டு ஆண்டு களிலும் நடப்பு ஆண்டிலும் எடுத்த தடுப்பு நடவடிக்கைகள், அளிக்கப்பட்ட தண்டனைகளின் விவரங்கள் என்ன? என்று வினா எழுப்பி இருந்தார்.



இதற்கு சுற்றுச்சூழல் அமைச்சரின் பதில் வருமாறு:-

“நகர்ப்பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரால் தான் ஆறுகள் மாசடைகின்றன. எனவே, ஆறுகள், நதிகள் உள்ளிட்ட நீர்நிலைகள் மாசு நிலை குறித்து மத்திய, மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் இணைந்து கண்காணித்து வருகின்றன. இதற்கான தேசியச் செயல் திட்டத்தின் கீழ், நீர்நிலைகளின் நீரின் தரத்தை தீர்மானிக்க பயோ கெமிகல் ஆக்ஸிஜன் டிமாண்ட் (BOD) அளவு விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆறுகளில் வெட்டவெளியில் குளிப்பதற்கு உகந்த நீரின் தரம் என்பது ஒரு லிட்டரில் 3 கிராம் அளவுக்கு மிகாமல் பயோகெமிகல் ஆக்ஸிஜன் இருக்க வேண்டும். ஆனால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் நடத்திய கண்காணிப்பு ஆய்வுகளில் கண்டறிந்த உண்மைகளின்படி தென்பெண்ணை ஆற்றில், பெங்களூர் சொக்கரசன்பள்ளி அணைப் பகுதியில், பயோ கெமிகல் ஆக்ஸிஜன் அலகின் அளவு 72 என்ற நிலையில் மிக அதிகமாக உள்ளது.

எனவே, பெங்களூரில் உள்ள மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தென்பிராந்திய மய்யம் கர்நாடகம் மற்றும் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ள சொக்கரசன் பள்ளி தென்பெண்ணை அணைப்பகுதியை தேசிய நீர் தரம் கண்காணிப்பு திட்டத்தின் வாயிலாக கண்காணித்து வருகிறது.

2024-ம் ஆண்டுக்கான ஆய்வுத் தரவுகளின்படி தென்பெண்ணை நதியில் உள்ள சொக்கரசன்பள்ளி அணை மாநில எல்லைப்பகுதியில் நதி நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜன் என்பது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தரக்கட்டுப் பாட்டின் குறைந்தபட்ச அளவான 0.3 மில்லி கிராம் ( லிட்டருக்கு) விட குறைவாக உள்ளது. இதைப் போலவே ஏனைய மாசுகளான அமிலத்தன்மை, கோலிஃபார்ம் (மனிதக் கழிவுகள்) போன்றவையும் மிகக் கடுமையாக உள்ளன.

**தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு!**

எனவே, தென்பெண்ணை நதி மாசுப் பிரச்சினை தொடர்பாக புதுடில்லியில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பெங்களூரு மாநகர் மற்றும் அருகாமையில் இயங்கும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரால் தென்பெண்ணை ஆறு மாசுபடாமல் இருப்பதை கண்காணித்து உறுதி செய்யுமாறு கர்நாடக மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவல்களை மத்திய சுற்றுச்சூழல் இணை அமைச்சர் தனது பதிலில் கழகப் பொருளாளரும், மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு மக்களவையில் தெரிவித்தார்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! புதுக்கோட்டை வடக்கு மாவட்ட - புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாநகர தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி- – அமைச்சர்கள் எஸ்.ரகுபதி -– சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜூலை 30-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா, செம்மொழி நாள் கழக அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் இன்று (30.07.2025 - புதன் கிழமை) மாலை 5.30 மணியளவில் புதுக்கோட்டை அண்ணா சிலை அருகில் டாக்ஸி மார்க்கெட் அருகில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர், துணை மேயர் எம்.லியாகத் அலி வரவேற்புரையாற்றுகிறார். எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், பி.டி.அரசகுமார், அரு.வீரமணி, சுப. சரவணன், வி.என்.மணி, கே.ஆர்.என்.போஸ், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, கீரை.தமிழ்ராஜா, சு. சண்முகம், அஞ்சுகம் பூபதி, கார்த்திகேயன் வேலுச்சாமி, டாக்டர் சி.குறிஞ்சிவாணன், தவ.பாஞ்சாலன், பூங்குடி எம்.சிவக்குமார், ஒன்றிய, மாநகர, பேரூர் கழக செயலாளர் கே.எஸ். சந்திரன், மு.க.இராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், என்.சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, வெ.முத்துகிருஷ்ணன், மா.தமிழ்அய்யா, ஓ.எஸ். வெங்கடாசலம், அ.இளங்குமரன், சி.சண்முகம் கே.பி. அய்யப்பன், வை.விஜயகுமார், உமுருகேசன், பி. அண்ணாதுரை, எம். எஸ்.ஏ.முகமது ரிஷா மாநகர கழக நிர்வாகிகள் அ. ரெத்தினம், ப.ரெங்கராஜன், மா.மணிவேலன், முத்தழகு பழவேலு. சேட்டு (எ) ஷாஜகான், ஏ.இராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜதுரை, .மு.க.அறிவுடைநம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர், கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் கனிம வளங்கள் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன் என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், ராப்பூசல் எம். செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, கழக முன்னோடிகள்: க. ரெங்கராஜ், மு.பி.மணி, வை.கோ.ராஜன், மு.கலியமூர்த்தி, எஸ்.திருஞானசம்பந்தம், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, இராம. செல்வராஜ், கறம்பக்குடி ஜெகந்நாதன், இராய. முத்துக்குமார், ஆர்.பாலகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட, ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள் ஜெயலெட்சுமி, தமிழ்ச்செல்வன், பாண்டிச்செல்லி, கே.ஆர்.என்போஸ், காமு மு.பி.மணி, சின்னையா, மாலா இராஜேந்திர துரை, லதா இளங்குமரன், சித்ரா ரவிச்சந்திரன், கல்யாணி மாரிமுத்து, த.செல்வம், ராஜேஸ்வரி செந்தில் குமார், சாந்தி தங்க சிங்கம், கை,பழனிச்சாமி, ஜெய மீரா ரவிக்குமார் வி.சகுத்தலா வைரவன், எம்.ஏ. எம். இம்தியாஸ்,

இ.செந்தில்ராஜா, எம். நைனாமுகமது, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உரக்கடை எம்.கருப்பையா, மஜீத் முபாரக், கே.எஸ்.ச.இளையச் சூரியன், டி.சூசைராஜ், கே.கணபதி, புத்தாம்பூர் எம்.சுப்பையா, டாக்டர் மு.க. முத்துக்கருப்பன். அ.பிரபா, செந்தாமரை பாலு, டி.எம். ஆர்.ராமமூர்த்தி, பொன். பாரிவள்ளல், வி.என்.எம். பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், கவிவேந்தன், சி. அரங்கநாயகம், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், ஆர். டி.ஆர்.ராமசாமி, வழக்கறிஞர் ஏ.வீரய்யா, ராஜா, கா.இளவரசன், தவசுமணி, எம்.வேலுச்சாமி, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி சிவக்குமார், முகம்மது அன்சாரி பாசித், செ.கணேஷ். மாவட்ட அணித் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மழையூர் ராமசாமி, ஜெ.அஸ்ரப் அலி, மணிமொழி மனோகரன், கி.சுப்பிரமணியன், சுமோ பாலு, எம்.பாலகிருஷ்ணன், ஏ. வெற்றிச்செல்வன், வை. ஆதிமூலம், வழக்கறிஞர் ரவிச்சந்திரன், கீரை. ஆ.ராஜேந்திர சோழன், கவிஞர் ஆ.மரிய எட்வின், ஏ.சுந்தர்ராஜன், என்.ஆர். பரிமளம், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், கே.பி எஸ்.மகேந்திரன், மெஸ் மூர்த்தி, ஆர்.செந்தில் குமார், ராம.பாலசுப்பிரமணியன், சின்னையா, டாக்டர் அமானுல்லா, எம்.ஆர். அன்பழகன், காட்டாத்தி குழந்தை, பா.ஹரிகரன், வே.கோவிந்தன், டாக்டர் தவ.பா.உதயசூரியன், பிரபாகர் தாஸ், நாகேந்தின், சி.வெங்கடேஷ், தரணி ரமேஷ், மழையூர் சந்திரசேகர், ப.தங்கமணி, கே.மகேந்திரன், ராஜீவ் உத்திராபதி, பி.விஸ்வநாதன், ஜினி இளங்கோவன் மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, மாநகர, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஸ் நன்றி கூறுகிறார்.



திருவாரூர் நகராட்சி கொடிக்கால்பாளையத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பரிசீலித்து உடனடி தீர்வு கண்டு பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன் வழங்கினார். உடன் நகர்மன்ற துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், நகர பொருளாளர் ரஜினி சின்னா, நகர்மன்ற உறுப்பினர்கள் ஐஸ்வர்யா பாஸ்கர், பெனாசிர், ஷகிலா பானு , மற்றும்கமிஷனர் சுரேந்திர ஷா உள்ளிட்ட அரசு அதிகாரிகள் இருந்தனர்.